# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,648 — 1966 ජනවාරි 27 වැනි බ්‍රහස්පතින්දා — 1966.1.27**

14,648 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு சனவரி மாதம் 27 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 15 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | 20 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | 20 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

எல். டி.—பி.
எல். ஜீ. டி.—ஜீ. 140

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின்கீழ், ஆக்கப்பட்ட விதி.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ஆு ஜனவரி மீ 5 ந் உ.

#### விதி

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1939, மார்ச் 10 இன் 8,438 ஆம் இலக்க கஸெற்றில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டபடியான விதிகள், 17 ஆம் பாகத்துக்கு உடன் பின்னர் கீழ்க்காணும் புதிய பாகத்தை இடுவதன்மூலம், இதனுல் மேலும் திருத்தப்படுகின்றன :—

#### பாகம் XVIII

**போக்கு வரத்துச் சாதனங்கள் வாங்குதற்கு கிராமச் சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் சம்பள முற்பணம் கொடுத்தல்**

நிரந்தர, உபகாரச் சம்பளமுள்ள சேவையிலிருக்கும், கிராமச்சபை யொன்றின் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் நான்கு வருடங்களுக்கொருமுறை துவிச்சக்கர வண்டிகள் வாங்குதற்காக, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய, ஆறு மாதச் சம்பளம் அல்லது ரூ. 275/-, இயற்றில் குறைவானதெதுவோ அது, சம்பள முற்பணமாக வழங்கப்படலாம் :—

(அ) விண்ணப்பகாரர் முற்பணத்துக்கு விண்ணப்பிக்கும் காலத்தில் வீதிக்குப் பயனுள்ள ஒரு துவிச்சக்கர வண்டியை வைத்திருக் காதவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பகாரர் உத்தியோகார்த்தமான பிரயாணம் செய்யுமாறு கேட்கப்படும் உத்தியோகத்தராக அல்லது ஊழியராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பகாரர் தகுதிகாண் நிலையிலிருப்பவராயின், விண்ணப்ப காரரின் வேலையும் நடத்தையும், தகுதிகாண் நிலைக்கால முடிவில், அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்படுவதை நிச்சயப்படுத்துகின்றனவென்று தலைவர் திருப்தியடைய வேண்டும் ;

(ஈ) புதிய துவிச்சக்கர வண்டிகள் மட்டுமே வாங்கப்படவும் அவை உடன்காசு கொடுத்து வாங்கப்படவும் வேண்டும்.

2. தங்களுடைய வேலைத் தலங்களுக்கும் அங்கிருந்தும் பிரயாணம் செய்தற்பொருட்டு துவிச்சக்கர வண்டிகளை வாங்க விரும்பும் விண்ணப்ப காரருக்கும் மேலேயுள்ள, நிபந்தனை (ஆ) நீங்கலான, 1 ம் துணைவிதி யிற் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய, முன்பணங்கள் கொடுக் படலாம்.

3. நிரந்தர அல்லது உபகாரச் சம்பளமுள்ள சேவையிலிருப்பவர் களும் மோட்டார் வாகனங்கள் வைத்துத் தாபரிக்கும் படி வேண்டப் படுபவர்களுமான கிராமச்சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்

---

## முக்கிய விளம்பரம்

*1966 ஆம் ஆண்டு மாசி (பெப்புருவரி) மாதம் 12 ந் திகதி சனிக்கிழமையும், மாசி (பெப்புருவரி) மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமையும் அரசாங்க விடுமுறைகளாக இருப்பதால் 1966 ம் ஆண்டு மாசி (பெப்புருவரி) மாதம் 17 ம் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1966 ம் ஆண்டு மாசி (பெப்புருவரி) மாதம் 11 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

**பேர்னுட் த சில்வா,**
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1966 ம் ஆு தை (சனவரி) மீ 27 ம் உ.*

களுக்கும் மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் அல்லது மோட்டார் கார்கள் வாங்குவதற்கு, எட்டு வருடங்களுக்கொருமுறை, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்மைய, சம்பள முற்பணங்கள் வழங்கப்படலாம் :—

(அ) மோட்டார் சைக்கிள்கள் அல்லது ஸ்கூட்டர்கள் வாங்குதற்கான விண்ணப்பங்களின் விஷயத்தில், கொடுக்கப்படவேண்டிய முற்பணத்தொகை, கடன் கொடுக்கும் சமயத்தில் பெறும் இரண்டு வருட அசல் சம்பளம் அல்லது வாகனத்தின் விலை—இவற்றில் குறைவானதெதுவோ அது—ஆகும். **எந்த விஷயத்திலும்** முற்பணம் ரூ. 2,850/–க்கு **மேற்படலாகாது.**

(ஆ) மோட்டார் கார்கள் வாங்குதற்கான விண்ணப்பங்களின் விஷயத்தில், விண்ணப்பகாரர், படிகள் உட்பட, ரூ. 6,000/– க்கு குறையாத வருடச்சம்பளம் பெறுபவராக இருத்தல் வேண்டும். முற்பணம் இரண்டு வருட அசல் சம்பளத்துக்கு மேற்படலாகாது ;

(இ) விண்ணப்பகாரர், அவருடைய உத்தியோக பிரயாணத்தின் பொருட்டு, விஷயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் சைக்கிளை அல்லது ஒரு மோட்டார்காரை உபயோகிப்பதற்கான முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரயாணப்படி பெறுபவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உபயோகிக்கப்பட்ட வாகனமொன்றை வாங்குவதற்கு உத்தேசிக்கப்படின், அந்த வாகனம் நியாயமான அளவு நன்கு உழைக்கும் நிலையில் உள்ளதென்றும் விண்ணப்பிக்கப்படும் கடன் தொகையளவு பெறுமதியுள்ளதென்றும் தலைவர் திருப்தியடையவேண்டும். இதன்பொருட்டு, வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வாகனம் நன்கு உழைக்கும் நிலையில் உள்ளதென்றும் அது தேவைப்படும் கடன் தொகையளவு பெறுமதியுள்ளதென்றும் ஒரு தகைமைவாய்ந்த மோட்டார் எந்திரத் தொழில் நிலையத்திடமிருந்து ஒரு சான்றிதழ் கொண்டுவரவேண்டும் ;

(உ) விண்ணப்பகாரர் விண்ணப்பிக்கும் காலத்தில் தமது தேவைக்கு உபயோகிப்பதற்குப் போதுமான, வீதிக்குப்பயனுள்ள, ஒரு மோட்டார் வாகனத்தை வைத்திருக்காதவராக இருத்தல் வேண்டும்.

4. முற்பணங்களுக்கான விண்ணப்பங்கள் இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள " அ " என்னும் வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

5. ஏதேனுமொரு வருடத்துக்கு உடன்முந்திய மூன்று வருடங்களுக்கான கிராமச்சபையின் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள்—

(i) ஒரு ஆதாயமீதம் காட்டினாலும் ;

(ii) காசேட்டு மீதங்களினதும் முதலீடுகளினதும் மொத்தத்தொகை, கட்டுப்பணங்களினதும் கிராமச்சபையின் செலவாகாத நன்கொடைகளினதும் மொத்தத் தொகையைக் காட்டிலும் கூடுதலாக இருந்தாலும் அன்றி அந்த வருடத்தில் அக்கிராமச் சபையால் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் சம்பள முற்பணம் கொடுக்கப்படலாகாது.

6. எக்கிராமச் சங்கத்தினதும் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவரும்—

(i) அந்த உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒரு கிராமச் சபையின் வேறு உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் கொடுக்கப்பட்ட சம்பள முற்பணம் எதன்பொருட்டும் பிணையாளாக ஒப்பமிட்டிருந்தால் ;

(ii) அறவிடுதலை (வாடகைப்படி, விசேட வாழ்க்கைப்படி, வாழ்க்கைச் செலவுப்படி உட்பட்ட) சம்பளத்தின் நாற்பது நூற்று வீதத்துக்குள் அடக்கமுடியாவிட்டால் ;

(iii) அந்த உத்தியோகத்தருக்கு அல்லது ஊழியருக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட சம்பள முற்பணம் எதுவும் முற்றுகத் திருப்பிக் கொடுக்கப்படாதிருந்தால் சம்பள முற்பணம் கொடுக்கப்படலாகாது.

7. இந்த விதிகளின்கீழ் கொடுக்கப்படும் முற்பணம் எதுவும், 36 மாதத் தவணைக் கட்டணங்களாக, ஒவ்வொரு வருட முடிவிலும் கொடுபட வேண்டியிருக்கும் தொகைமீது 4½ வீதம் வருட வட்டியோடு, அறவிடப்படவேண்டும்.

8. ஒரு கிராமச் சபையின் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் இந்த விதிகளின்கீழ் கொடுக்கப்பட்ட சம்பள முற்பணம் எதன்பொருட்டும் வருமதியாகும் தவணைக் கட்டணங்களை அந்த உத்தியோகத்தரின் அல்லது ஊழியரின் வேதனத் தொகுப்பில் அறவிடச் செய்வது தலைவரின் கடமையாகும்.

9. உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் கொடுக்கப்பட்ட சம்பள முற்பணம் எதுவும், அது எத்தேவைக்கு கொடுகப்படுகின்றதோ, அதற்கு, அந்த உத்தியோகத்தரால் அல்லது ஊழியரால், உபயோகிகப்படுமாறு தலைவர் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

10. ஒரு கிராமச் சபையின் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் எவருக்கும் கொடுக்கப்பட்ட சம்பள முற்பணத்தில் திருப்பிக்கொடுபட வேண்டியிருக்கும் தொகை எதுவும், அந்த உத்தியோகத்தரின், அல்லது ஊழியரின் சேவைகள் நிறுத்தப்படும் பட்சத்தில், அன்னாரின் கடைசி மாதச் சம்பளத்திலிருந்து அறவிடப்படல் வேண்டும்.

11. இந்த விதிகளின் கீழ் கொடுக்கப்படும் சம்பளமுற்பணம் ஒவ்வொன்றும், அவ்விடயமாக தற்போது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பொருந்துவனவாயுள்ள நிதிவிதிகளின்கீழ் பொருந்துகின்ற அதே நிபந்தனைகளுக்கு அமைந்திருத்தல் வேண்டும்.

12. தலைவர், வாகனங்கள் உடன்காசுக்கு வாங்கப்பட்டதற்கு ஆதாரமான பற்றுச் சீட்டுகளைப் பெற்று அத்தகைய கொள்வனவுகள் நிஜமானவை என்பதை முறைப்படி குறித்துக்கொண்டு அவற்றைத் திருப்பிக்கொடுக்க வேண்டும். அவர், கடன் முற்றுக அறவிடப்படும்வரை விண்ணப்பகாரரால் அவர்களின் வாகனங்கள் உண்மையாக உபயோகிக்கப்படுகின்றனவென்பதை நிச்சயித்தற்பொருட்டு காலத்துக்குக் காலம் அவற்றைக் கொண்டுவந்து காட்டும்படி அவர்களைக் கேட்கவேண்டும்.

13. அந்த வாகனத்துக்கு முற்றுகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றதென்றும் அது தமது பாரிக்கப்படாத சொத்தென்றும் தலைவர், விண்ணப்பகாரரிடமிருந்து ஒரு உறுதியுரை பெறல் வேண்டும்.

14. முற்பணம் கொடுக்கப்பட்ட இருவாரங்களுக்குள் கொள்வனவை முடித்து, உடன் காசுக்கு வாங்கப்பட்டதற்கு ஆதாரமாக தேவையான பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், தலைவர் முற்பணம் முழுவதையும் உடனே திருப்பிக் கேட்கவேண்டும்.

15. மோட்டார் கார்களின் விடயத்தில், சம்பந்தப்பட்ட வாகனத்துக்கு வருடந்தோறும் உத்தரவுச் சீட்டு பெற்றுக்கொள்ளும்படியும் உத்தரவுச் சீட்டையும் பதிவத்தாட்சிப் பத்திரத்தையும் விரிவான காப்புறுதிப் பத்திரத்தையும் கொண்டுவந்து காட்டும் படியும் விண்ணப்பகாரர் கேட்கப்படல் வேண்டும்.

16. முற்பணம் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் முற்பணத்தை அவர் முற்றுகத் திருப்பிக்கொடுப்பதற்கு முன்னர் மற்றொரு உள்ளூர் அதிகாரத் தாபனத்துக்கு மாற்றப்பட்டால், அந்த உத்தியோகத்தர் மாறிப்போகும் திகதிக்கு முன்னர் கொடுபட வேண்டிய மீதத்தை முற்றுகக் கொடுத்துத் தீர்க்கவேண்டும்.

17. முற்பணம் கொடுக்கப்படுமுன்னர், விண்ணப்பகாரர், இதற்குள்ள அட்டவணையிலுள்ள " ஆ " பத்திரத்தில், விண்ணப்பகாரரின் பதவிக்கு குறையாத பதவியிலுள்ள, நிரந்தரமான அல்லது உபகாரச் சம்பளமுள்ள உள்ளூராட்சி ஊழியர் ஒருவரைப் பிணையாளியாகக்கொண்டு, ஒரு முறி எழுதி ஒப்பமிடவேண்டும். அவர், இதற்குள்ள அட்டவணையிலுள்ள " இ " பத்திரத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளவும் வேண்டும்.

18. முறியும் உடன்படிக்கையும் முத்திரைக் கட்டளைச்சட்ட விதிமுறைகளுக்கிணங்க முறையாக முத்திரை ஒட்டப்பட்டு, அங்ஙனம் ஒட்டப்பட்ட முத்திரைகள், தலைவரால் துளையிடப்பட்டு அல்லது வேறு விதத்தில் முறையாக அழிக்கப்படவேண்டும். முறியிலேனும் உடன்படிக்கையிலேனும் உள்ள மாற்றங்கள் எதுவும் இரு தரப்பினராலும் சாட்சிகளாலும் உண்மைப்படுத்தப்படுதல் வேண்டும்.

19. இவ்விதிகளில்—

" தலைவர் " என்பது கிராமச் சபைத் தலைவர் எனப்பொருள்படும் ;

" கிராமச் சபை " என்பது கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப் பொருள்படும்;

" உத்தியோகத்தர் " " ஊழியர் " என்பன உள்ளூராட்சி சேவை அதிகாரசபையால் அல்லது வேறுவிதமாக நியமனஞ்செய்யப்பட்ட, கிராமச்சபையொன்றின் வேலையாள் எனப் பொருள்படும்.

" சம்பளம் " என்பது அடிப்படைச் சம்பளம் எனப் பொருள்படும்.

**ஒரு வாகனம் வாங்குவதற்கான ஒரு முற்பணத்துக்கான விண்ணப்பம்**

**(இது இணைப்படிகளாக, கி. ச. தலைவர் மூலம், உள்ளூராட்சி உதவி அதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும்)**

1. உத்தியோகத்தரின் பெயரும் பதவிப் பெயரும் : ————.
2. நியமனம் பெற்ற திகதி : ————.
3. நியமனத்தின் தன்மை—

(1) நிரந்தரமானதா அல்லது உபகாரச்சம்பளம் உள்ளதா?————.

(2) தகுதிகாண் நிலையிலுள்ளதா?————.
(தகுதிகாண் நிலைக்காலத்தைக் கூறுக)

(3) உடன்படிக்கையின் பேரிலா?————.
(ஒப்பந்தக்காலத்தைக் கூறுக)

(4) தற்காலிகமானதா?————.

4. தற்போதைய சம்பளமும் கொடுப்பனவு மூலமும் : ————.

5. விண்ணப்பிக்கப்படும் தொகை :————.

6. முன்பு ஒரு முற்பணம் பெறப்பட்டிருப்பின், தொகையையும், பெற்ற திகதியையும் நோக்கத்தையும் கூறுக : ————.

7. வாங்குவதற்கு உத்தேசித்துள்ள வாகனத்தின் விவரணம் (விலை, இனம், புதியதா அல்லது பழையதா?) ————.

8. விண்ணப்பகாரர் ஒரு வாகனம் வைத்திருப்பாரேல் மற்றொன்று தேவைப்படுவதேன்? வைத்திருக்கும் வாகனத்தை என்ன செய்வதாக எண்ணம்?————.

9. பகுதிப் பணம் கொடுத்து வாகனம் எடுக்கப்படின், அதன்பொருட்டு விடப்படும் தொகை : ——— —.

10. தற்போதுள்ள வாகனம் ஒரு முற்பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டதாயின் அந்த வாகனத்தை என்ன செய்வதாக உத்தேசம்? ———.

11. உத்தியோகத்தரின் பதவிப் பெயரிலிருந்து உத்தியோக பிரயாணத்தின் தன்மை புலனாகாதிருப்பின், உத்தியோக பிரயாணத்தின் தன்மை : ————.

நான் மேலே கூறியுள்ளவை சரியானவையென்று நான் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்

இடம் : ——————.

திகதி : ————.

உ. ஆ. உ. அ.,

விதந்துரைத்து அனுப்பப்படுகின்றது. கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட உரிய தீர்மானத்தின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருக்கின்றது.

தலைவர்,
கி. ச. ........................

தலைவர், கி. ச.,
........................

கிராமச்சபை விதிகளுக்கமைய, ரூ. .............. முற்பணம் அங்கீகரிக்கப்படுகின்றது. இத்தொகை வருடமொன்றுக்கு 4½% (நாலரை நூற்று வீத) வட்டியோடு, ஒவ்வொன்றும் ரூ. ........ ம், ஒரு ரூ. .......... ம் கொண்ட ........ மாதத் தவணைக் கட்டணங்களாக திருப்பிக்கொடுபடவேண்டும்.

உ. ஆ. உ. அ.

### பத்திரம் " ஆ "

இத்தாற் சகலருமறிக : ....................................

வாசியான* ........................................ முதல் ஆள், ........................................ வாசியான † .................................... பிணையாள் ஆகிய நாம் ஒருமித்தும் தனித்தும் ..................................கிராமச் சபைக்கு இலங்கையின் சட்டபூர்வமான பணம் .......... ரூபாய் மட்டும்கொண்ட தொகைக்கு பாத்திரப்பட்டும் உறுதியாகக் கட்டுப்பட்டும் உள்ளோம். சொல்லப்பட்ட கிராமச் சபைக்கு இத்தொகையினை முறையாகவும் உண்மையாகவும் செலுத்துதற்கு, சொல்லப்பட்ட பிணையாளி, " பெனிபிசியம் ஓடினிஸ் டிவிசியோனிஸ் எற் எக்ஸ்கசியோனிஸ் " என்னும் சொற்றொடரில் கருதப்பட்டுள்ள சகாயத்தையும், சட்டப்படி பிணையாளிகள் உரிமைபூண்டுள்ள, ஏனைய சகாயங்களையும், சிறப்புரிமைகளையும், புறணடைகளையும் இத்தால் கைவிட்டு, எங்களை ஒருமித்தும் தனித்தும் எங்களெங்களின் உரிமைக்காரர், தத்துவக்காரர், நிருவாகத்தர், சொந்தப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் அவர்களனைவரையும் இத்தால் கட்டுப்படுத்திக்கொள்கின்றோம்.

சொல்லப்பட்ட * .................................... என்பவர் சொல்லப்பட்ட கிராமச் சபையோடு செய்துகொண்ட ..............தேதி இடப்பட்ட உடன்படிக்கையின் நியதிகளின்படி ஒரு முற்பணம் பெற்று ........................................ கிராமச் சபைக்கு கடன்கொடுக்க வேண்டியவராகி, அத்தொகையினைப் பெற்றமையை சொல்லப்பட்ட * ........................................இத்தால் ஒப்புக்கொள்ளுகின்றபடியாலும்,

சொல்லப்பட்ட † ........................................ என்பவர் சொல்லப்பட்ட உடன்படிக்கையை வாசித்து சொல்லப்பட்ட தொகையான ......... ரூபாயும் சொல்லப்பட்ட* ........................... என்பவரால் முறையாகவும் நம்பிக்கையாகவும் கொடுக்கப்படுதற்கு பிணையாளியாவதற்குச் சம்மதித்திருப்பதாலும்,

இப்பொழுது மேலேயெழுதப்பட்டுள்ள கடமைப்பாட்டின் நியதிகள் யாதெனில், மேற்கூறிய* ........................................ என்பவராவது சொல்லப்பட்ட பிணையாளியாவது அவரவர்களின் உரிமைக்காரர், தத்துவகாரர் அல்லது நிருவாகத்தராவது அல்லது அவ்வித உரிமைக்காரர், தத்துவக்காரர், நிருவாகத்தர் எவராவது ............ .......... கிராமச் சபையின் சார்பில் அப்போதைய தலைவரிடம் .................................... ரூபாய் தொகையினை, .......... ரூபாய் சம மாதத் தவணைக் கட்டணங்களாகவும், அத்தகைய கொடுப்பனவுளில் முதலாவதை அடுத்த .............. மாதம் .... தினத்திலேயும் முழுத்தொகையான ........ ரூபாயும் மேற்கூறிய பிரகாரம் கொடுத்துத் தீர்க்கப்படும்வரை, கொடுக்கப்பட வேண்டுமென்பதே.

அப்பொழுது மேலேயெழுதப்பட்டுள்ள கடமைப்பாடு சூனியமாகிவிடும் ; இல்லையேல் அதுவே முழு வலுவும் திறனும் கொண்டு நிலைத்திருக்கும்.

இந்த 196. . . ம் ஆண்டு .......... மாதம் .... ந் தேதி.......... .................. ல் கையொப்பமும் தேதியும் இடப்பட்டது.

————,
முதல் ஆளின் கையொப்பம்.

————,
பிணையாளியின் கையொப்பம்.

சாட்சிகள் :
1.————,
2.————,

* சம்பள முற்பணம் வாங்குபவரின் பெயர்.

† பிணையாளரின் பெயர் :

### பத்திரம் " இ "

இந்த ஆயிரத்துத் தொளாயிரத்து .................. ம் ஆண்டு ............ மாதம் .... ம் திகதி ............................ ............ (இதனகத்துப் பின்னர் வாங்குபவர் எனப்படுபவர்) ஒரு பகுதிக்கும் .................. கிராமச் சபை (இதனகத்துப் பின்னர் சபை எனப்படுவது) மறுபகுதிக்குமிடையில் செய்துகொள்ளப்படும் உடன்படிக்கை.

பின்வருமாறு உடன்பட்டிருக்கின்றபடியால் :—

(1) வாங்குபவர் சுமார் .................. பெறுமதியான ஒரு .................. வாங்க உடன்படுகிறார்.

(2) அத்தேவைக்கு வேண்டிய .................... தொகைக்கு மேற்படாத ஒரு தொகையை வாங்குபவருக்கு முற்பணமாகக் கொடுப்பதற்கு சபை உடன்படுகின்றது.

(3) வாங்குபவர் சபையால் பணிக்கப்படுகின்றபடியும் பணிக்கப்படும் போதும் முற்பணத்தொகையைத் திருப்பிக்கொடுக்க உடன்படுகிறார்.

(4) வாங்குபவர் இத்தால் கீழ்காண்பவற்றுக்கு உடன்படுகின்றார் :—

(அ) முற்பணத்தொகை முழுவதும் திருப்பிக்கொடுக்கப்படும்வரை, சபைத் தலைவரின் அனுமதியின்றி செல்லப்பட்ட ............ .......... விற்காமல் அல்லது கையளிக்காமல் இருக்க.

(ஆ) சபைத் தலைவரால் .................... பரிசோதனைக்குக் கொண்டுவரும்படி கேட்கப்படும்போது அவ்விதம் செய்ய, சபையால் கொடுக்கப்பட்ட முற்பணத்தொகை முற்றாகத் திருப்பிக் கொடுக்கப்படு முன்னர், வாங்குபவர் உள்ளூராட்சிச் சேவையை விடுவாராயின் அல்லது மரிப்பாராயின், அப்பொழுது அவ் விடயத்தில், சொல்லப்பட்ட முற்பணத்தின் அப்போதுள்ள கொடுபட வேண்டிய மீதம் முழுவதும் வாங்குபவரால் அல்லது அவரது உரிமைக்காரரால், தத்துவகாரரால் அல்லது நிருவாகத்தாரால் உடனே கொடுக்கப்பட வேண்டும். வாங்குபவராயினும் அவரது உரிமைக்காரராயினும் தத்துவகாரராயினும் நிருவாகத்தராயினும் சொல்லப்பட்ட முற்பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், சொல்லப்பட்ட .................. ஆட்சி எடுத்து அதை விற்றுக்கையளித்து, அந்த விற்பனவு மூலம் கிடைக்கும் கிரயத்திலிருந்து மீதத் தொகையைக் கழித்தெடுப்பது சபைக்கு சட்டமுறையாகும்.

(இ) அவர் சபையின் சேவையிலிருந்து வேறு உள்ளூர் அதிகாரத்தாபனம் எதற்கும் மாற்றப்பட்டால், கொடுபடவேண்டிய முற்பண மீதத்தை வழக்கம்போல தவணைக்கட்டணங்களாக திருப்பிக் கொடுப்பதற்கான ஒழுங்கைச் செய்ய.

மேலே எழுதியுள்ள திகதியிலும் வருடத்திலும் எங்கள் கையொப்பங்களை இடுகின்றோம்.

சொல்லப்பட்டவர்களால் இவர் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது :—

சாட்சியின் கையொப்பம் :————,
முகவரி :————,
தொழில் ;————,
கையொப்ப மிட்டவர் ————,

தலைவர்,
(மேற்கூறியபடியான சபையின் சார்பில்)
இவர் முன்னிலையில்

கையொப்பம் :————,
முகவரி :————,

1–876—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

எல். டி.—பி. 31/47 (வி.)
எல். ஜி. டீ.—ஜி.ஜே. 15/1/8

## உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் சட்டம்

### 84 ம் பிரிவின் கீழான கட்டளை

உள்ளூராட்சி அமைச்சரான முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் சட்டத்தின் (அத்தியாயம் 262) 84 ம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு இக்கட்டளையினால் 1965 பிப்ரவரி 1 ம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் சட்டத்தின் (அத்தியாயம் 262) கீழ், கீழ்க் காணப்படும் அட்டவணையில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத் துக்குமான அங்கத்தவர்களைத் தெரிந்தெடுத்தற்காக ஒரு பொதுத் தேர்தல் நடத்தும்பொருட்டு இதுவரை எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கை களையும், இனிமேலும் எக்காலத்திலும் செல்லுபடியாகாததாகவும் எவ்வித வலுவற்றதாகவும் பிரகடனப்படுத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.

**அட்டவணை**

காலி மாவட்ட பிலான-மெதறம்ப கிராமப்பிரதேசத்திலுள்ள கிராம சபை.

காலி மாவட்ட பரகொட கிராமப்பிரதேசத்திலுள்ள கிராமசபை.

மாத்தறை மாவட்ட கிரிந்த-புகுல்வெத்த கிராமப் பிரதேசத்திலுள்ள கிராம சபை.

1-862—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

---

எல். டி. பீ. 89/52

## அவிசாவெலை நகர சபை

### வாடிவீடுகள் சட்டம்

அவிசாவெலையிலுள்ள வாடிவீடு தொடர்பாக, அதற்குரிய அதிகாரியான, அவிசாவெலை நகர சபையால் (257 ஆம் அத்தியாயமான) 1951 இன் 12 ஆம் இலக்க வாடிவீடுகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு அப்பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.

கொழும்பு,
24.12.1965

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

### விதிகள்

1. (1) வாடிவீட்டின் ஏதேனுமொரு பகுதியை உபயோகிக்கும் அல்லது தங்குதற்குப் பயன்படுத்தும் ஒவ்வொருவராலும் இதிலுள்ள அட்டவணையில் குறித்துள்ள வீதப்படியான தங்குதற் கட்டணமொன்று செலுத்தப்பட வேண்டும்.

(2) கீழ்க்காண்பவர்கள் தொடர்பாகக் கட்டணம் விதிக்கப்பட மாட்டாது :—

(அ) ஒரு கைக்குழந்தை ;

(ஆ) வாடிவீட்டு அதிதி ஒருவரைக் கவனித்துக் கொண்டு காரில் அல்லது கார்க் கொட்டிலில் உறங்கும் ஒரு வேலையாள் ;

(இ) காரிலேனும் கார்க்கொட்டிலிலேனும் அவர் உறங்கு வாராயின், வாடிவீட்டுவளவில் விடப்படும் எக்காரினதும் சாரதி.

2. (1) ஒவ்வொரு அதிதியும் வாடிவீட்டில் அனுமதிக்கப்பட்டதும் வாடிவீட்டு அதிதிகள் ஏட்டில் தமது பெயரையும் முகவரி யையும் தெளிவாக எழுதவேண்டும்.

(2) முற்போந்த பந்தியின் கேட்கப்பட்டவற்றை அவர் பூர்த்தி செய்யும்வரை ஒரு அதிதி, வாடிவீட்டின் எப்பகுதியிலும் தங்கவோ, சிற்றுண்டிகள் கொள்ளவோ முடியாது.

3. (1) தலைவரின் எழுத்துமூலமான அனுமதியின்றி, தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்குமேல் வாடிவீட்டின் எப்பகுதியிலும் ஒருவர் தங்கலாகாது.

(2) மேற் கூறியபடி அனுமதிபெறாது வாடிவீட்டில் தங்கும் ஒவ்வொருவரும், மூன்று நாட்கள் முடிந்ததும் வாடி வீட்டை விட்டுச் செல்ல வேண்டும்.

4. ஓர் அதிதியால் செலுத்தப்படும் கட்டணங்கள் யாவும், வாடிவீட்டுக் காப்பாளரால் அதன் பொருட்டு வைக்கப்பட்டுள்ள, பதிவேட்டில் பதியப்பட வேண்டும்.

5. ஓர் அதிதியால் செலுத்தப்படவேண்டிய வாடிவீட்டுக் கட்டணங்கள், கேட்கப்படுங்கால், காசாக உடனே கொடுக்கப்பட வேண்டும் ; அவ்விதம் கொடுக்கத் தவறின், அந்த அதிதிக்கு மேலும் வழங்கு பொருள்கள் கொடுக்க மறுப்பதற்கு வாடிவீட்டுக்காப்பாளர் உரித்துடையவராவார்.

6. (1) அறையொன்றை ஒதுக்கிவைக்கும்படி குறைந்தது ஒரு நாளுக்கு முன்னராகக் கேட்கப்பட்டிருந்தாலன்றி எந்த அதிதிக்கும் அவர் வந்து சேருவதற்கு முன்னர் அதை ஒதுக்கிவைக்க லாகாது.

(2) இந்த விதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் அறை ஒதுக்கப்படுங்கால், அதனை எடுப்பவர் அதில் தங்கா விடினும் அதற்கு பணம் கொடுக்கப்பட வேண்டும்.

(3) யாருக்காக ஓர் அறை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் வந்து சேரும்வரை, அந்த அறை, அது தேவைப்படுகின்ற வேறு எவருக்கும் பயன்படக்கூடியதாய் இருக்க வேண்டும்.

7. தந்தியில், அனுப்பியவரின் பெயரும் முகவரியும் குறிக்கப்பட்டி ருந்தாலன்றி சாப்பாடுகள் வேண்டுமெனக் கேட்கும் தந்தி எதற்கும் இணங்குதற்கு வாடிவீட்டுக்காப்பாளர் கட்டுப்பட்டவராகார்.

8. வாடிவீட்டிலிருக்கும் படுக்கை, சார்மனைக் கதிரை அல்லது சார்மனைக் கட்டிலில் ஒரு படுக்கை விரிப்பு விரிக்கப்பட்டிருந்தாலன்றி, உறங்குவதற்கு அதை உபயோகிக்கலாகாது.

9. ஓர் அதிதியால் சேதப்படுத்தப்படும் அல்லது உடைக்கப்படும் எல்லாப் பொருள்களினதும் பெறுமதி, வாடிவீட்டு அறிவித்தற் பலகை யில் காணப்படும் கட்டண அளவுத்திட்டத்தின்படி, அந்த அதிதியால் செலுத்தப்பட வேண்டும்.

10. (1) வாடிவீடு அல்லது வாடி வீட்டுக்காப்பாளர்பற்றி ஓர் அதிதி செய்ய விரும்பும் முறைப்பாடு எதுவும் வாடிவீட்டில் வைக்கப் பட்டுள்ள முறைப்பாட்டேட்டில் குறிக்கப்பட வேண்டும்.

(2) முறைப்பாடேட்டைக் கொண்டுவரும்படி எந்த அதிதியாலும் கேட்கப்படுங்கால் அவ்விதம் செய்வது வாடிவீட்டுக்காப்பாள ரின் கடமையாகும்.

(3) வாடிவீட்டுக் கட்டணங்கள் பதியப்படும் ஏட்டில் வாடிவீடு பற்றிய குறிப்பு அல்லது முறைப்பாடு எழுதப்படலாகாது.

11. (1) தலைவரின் எழுத்துமூலமான அனுமதியுடன்றி, வாடிவீட்டு வளவில் வெளியாட்கள் கலந்துகொள்ளும் நண்பகலுணவு, இராவுணவு அல்லது தோட்டவிருந்து அல்லது வேறு வர வேற்பு அல்லது கொண்டாட்டம் நடைபெறக்கூடாது. அத் தகைய வெளியாட்கள் கலந்து கொள்ளும் நண்பகலுணவு, இராவுணவு, தோட்டவிருந்து அல்லது வேறு வரவேற்பு அல்லது கொண்டாட்டம் ஒவ்வொன்றும் அந்த வாடிவீட்டில் தங்கியிருக்கும் மற்ற அதிதிகட்கு எத்தகைய தொந்தரவும் விளைவிக்காத முறையில் நடத்தப்படவேண்டும்.

(2) பந்தி (1) இல் சொல்லப்படும் நோக்கங்கள் எதற்கும் வாடிவீடு முழுவதையுமேனும் எப்பகுதியையேனும் உபயோ கிப்பதற்குத் தலைவர் அனுமதிக்குமிடத்து, கீழ்காணும் வீதங் களின்படியான கட்டணம் செலுத்தப்படவேண்டும். :—

(அ) வருகை தரும் ஆட்களின் எண்ணிக்கை இருபத்தி னன்குக்கு மேற்படாதிருப்பின், (இதற்குள்ள அட்ட வணையில் குறித்துள்ள தங்குதற் கட்டணங்களுக்குப் பதிலாக) முதல் ஆறு மணித்தியாலங்களுக்கும் ரூ. 15 ம், கூடுதலான ஒவ்வொரு மணித்தியாலத் துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் ரூ. 2 ம் கொண்ட கட்டணம் ஒன்றும் ;

(ஆ) வருகை தரும் ஆட்களின் எண்ணிக்கை இருபத்தி னன்குக்கு மேற்படின், இதற்குள்ள அட்டவணையில் சொல்லப்படும் வீதங்களின்படியான தங்குதற் கட்டணங் களும்.

12. வாடிவீட்டில் உண்மையாகவே தங்கியிருக்கும் ஒருவர், வாடி வீட்டோடு இணைந்துள்ள கார்க்கொட்டில் அல்லது குதிரைக்கொட்டில் எதையும் உபயோகிப்பதற்கு, வாடிவீட்டில் தங்கியிராதவருக்கு மேலான முன்னுரிமை உடையவராவார்.

13. வாடிவீட்டுக் கார்க்கொட்டிலில் விடப்பட்டுள்ள அல்லது வாடி வீட்டுவளவுக்குள் எங்கேனும் நிறுத்தப்பட்டுள்ள சொந்த வாகனம் ஒன்றின் உடைமையாளர் அல்லது வாகனமொன்றை வாடகைக்கமர்த் தியவர் வாடிவீட்டில் தாம் தங்காதிருந்தபோதிலும், அந்த வாகனத்தை நிறுத்துதற்கான அல்லது கார்க்கொட்டிலை உபயோகிப்பதற்கான

கட்டணத்தோடு அந்த வாகனம் அங்ஙனம் கார்க்கொட்டிலிலிடப்பட்டிருக்கும் அல்லது நிறுத்தப்பட்டிருக்கும் கால எல்லைக்கு உரிய தங்குதற் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

14. இந்த விதிகளுள் எதையும் மீறியமைக்காகக் குற்றந்தீர்த்தளிக்கப்பட்ட அதிதியெவரும் வாடிவீட்டை உபயோகியாதவாறு தடுத்தல் தலைவருக்கு சட்டமுறையானதாகும்.

15. ஒழுக்கக்கேடான செய்கைக்காக வாடிவீட்டின் எப்பகுதியிலும் எவரும் அல்லது எவர்களும் தங்குதற்கு வாடிவீட்டுக் காப்பாளர் அனுமதிக்கலாகாது.

16. அதிதி எவரும் அல்லது அதிதியின் வேலையாள் எவரும் வாடிவீட்டை உபயோகிக்கும் மற்றவர்களுக்கு தொந்தரவு உண்டுபண்ணக் கூடிய விதத்தில் இழி செயல்புரியவோ நடந்துகொள்ளவோ கூடாது.

17. அதிதி, எவரும் வாடிவீட்டுக்குள் ஒரு நாயைக் கொண்டுவர அனுமதிக்கப்படலாகாது.

18. இரண்டாண்டுகளுக்குக் குறையாத ஒருகால அளவுக்கு சபையின் சேவையிலிருந்து வரும் சபையின் உத்தியோகத்தர்கள், வாடிவீட்டை அல்லது அதன் எப்பகுதியையும் உபயோகிப்பதற்கு இதற்குள்ள அட்டவணையில் சொல்லப்படும் வீதங்களில் பாதிக் கட்டணம் விதிக்கப்படுவர். இச்சலுகை, அத்தகைய உத்தியோகத்தர் ஒவ்வொருவரினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கும் உரியதாகும்.

19. சபை சார்பான எவ்விடயம் சம்பந்தமாகவும் கடமையாற்றுகையில், வாடிவீட்டில் தங்கும் அரசாங்க சேவையாளர் எவரும், இதற்குள்ள அட்டவணையில் சொல்லப்படும் வீதங்களில் பாதி வீத தங்குதற கட்டணம் விதிக்கப்படுவர்.

20. இந்த விதிகளுள் எதற்கும் மாறான செயல், ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத தண்டத்தால் தண்டிக்கப்படக்கூடியதாகும்.

21. இந்த விதிகளில்—

"தலைவர்" என்பது சபைத் தலைவரைக் குறிக்கும் ;
"சபை" என்பது அவிசாவெலை நகர சபையைக் குறிக்கும் ;
"வாடிவீடு" என்பது அவிசாவெலை வாடிவீட்டைக் குறிக்கும்

22. 1946, மார்ச் 1 இன் 9,526 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட அவிசாவெலையிலுள்ள வாடிவீடுபற்றிய விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

### அட்டவணை

### தங்குதற் கட்டணங்கள்

1. வாடிவீட்டில் தங்கிநிற்கும், ஆனால் அங்குள்ள படுக்கையை உபயோகிக்காத ஒவ்வொரு ஆளுக்கும்—

(அ) ஒரு மணித்தியாலத்துக்கு மேற்படாத கால அளவுக்கு— ரூ. ச.
 (i) அந்த இடத்தில் பின்னேரத் தேனீர்மட்டும் அருந்தினால் .. .. 0 15
 (ii) அந்த இடத்தில் (பின்னேரத் தேனீர் அல்லாத) ஒரு சாப்பாடு அருந்தினால் .. 0 30

(ஆ) ஒரு மணித்தியாலத்துக்கு மேற்பட்ட ஆனால் 2 மணித்தியாலங்களுக்கு மேற்படாத கால அளவுக்கு—
 (i) அந்த இடத்தில் பின்னேரத் தேனீர் மட்டும் அருந்தினால் .. .. 0 30
 (ii) அந்த இடத்தில் (பின்னேரத் தேனீர் அல்லாத) ஒரு சாப்பாடு அருந்தினால் .. 0 45

(இ) 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 12 மணித்தியாலங்களுக்கு மேற்படாத கால அளவுக்கு—ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கு .. .. 0 15

(ஈ) 12 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத கால அளவுக்கு 2 50

2. வாடிவீட்டில் தங்கி, உறங்குவதற்கு அங்குள்ள படுக்கை ஒன்றினை உபயோகிக்கும் ஒவ்வொரு ஆளுக்கும், ஒரு சாப்பாடு அருந்தும் பட்சத்தில்—

(அ) தங்கும் கால அளவு நான்கு மணித்தியாலங்களுக்கு மேற்படாவிடின்—ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் .. 0 75

(ஆ) தங்கும் கால அளவு நான்கு மணித்தியாலங்களுக்கு மேற்பட்டு இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு மேற்படாவிடின் .. .. 3 00

3. வாடிவீட்டில் ஒரு படுக்கை உள்ள ஒரு அறையில் இருபத்திநான்கு மணித்தியாலக்கால அளவுக்கு, தங்கும் ஒவ்வொரு ஆளுக்கும், வாடிவீட்டில் சாப்பாடு அருந்தாத பட்சத்தில் .. .. .. 3 25

4. தலைவரின் அனுமதியுடன் ஒரு முழு மாதகால அளவுக்கு வாடிவீட்டின் எப்பகுதியிலும் தங்கும் ஒவ்வொரு ஆளுக்கும் .. .. .. 75 00

5. சபையின் உத்தியோகத்தர் எவரும் 2 ஆம் இலக்க அறையை உபயோகிப்பதற்கு அல்லது அங்கு தங்குதற்கு மாதமொன்றுக்கு .. .. 25 00

6. (கார்க்கொட்டிலிலிடப்படாத) மோட்டார்க் கார் அல்லது மோட்டார்ச் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும்—

(அ) ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்படாத கால அளவுக்கு .. .. கட்டணமில்லை

(ஆ) ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத எக்கால அளவுக்கும் .. .. 0 25

7. (கார்க்கொட்டிலிலிடப்படும்) மோட்டார்க் கார் அல்லது மோட்டார்ச் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும்—

(அ) ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்படாத எக்கால அளவுக்கும் .. கட்டணமில்லை

(ஆ) ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத எக்கால அளவுக்கும் .. .. 0 50

(இ) முழு மாதம் ஒவ்வொன்றுக்கும் .. 10 00

1–896—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

---

## 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்)

### அதிகாரச் சட்டம்

உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) அதிகாரச் சட்டத்தின் (அதிகாரம் 261) 3 ஆம் பிரிவின் கீழ் வவுனியா மாவட்டத்துக் கிழக்கு மூலை வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம். அப்பிரிவின் தாற்பரியப்படி வெளியிடப்படுகின்றது.

### தீர்மானம்

உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1963 ஜூன் 21 இன் 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, செனேற்றுச சபையாலும் சனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1965 ஜனவரி 8 இன் 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட நியமத் துணைவிதிகளின் 38 ஆம் பாகத்தை இத்தீர்மானம் வர்த்தமானியில் வெளியாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதெனக் கிழக்குமூலை வடக்குக் கிராமச் சபை, உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (நியமத்துணைவிதிகள்) அதிகாரச் சட்டத்தின் (அதிகாரம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

அ. வீரகத்தி,
தலைவர்.

கிராமச் சபை அலுவலகம்,
கிழக்கு மூலை வடக்கு,
ஓமந்தை,
1965 ம் ஆப் நவெம்பர் மீ 26 ந் வ.

1–931—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

எனது இல. ரி. சி. எம்.

# வரவு செலவுத் திட்டங்கள்

## 1965 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சேமிப்பு மிகுதித் திட்டம் அங்கீகரித்தல்

18.12.65 ல் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் 21 வது விடயமாக பட்டண சபை நிதி நடைமுறைச் சட்டம் 40(2) கீழ் உபமானிய வரவு செலவுத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டுச் சபை பின்வரும் சேமிப்பு மிகுதித் திட்டத்தை ஏகமனதாக அங்கீகரித்தது.

| | சேமிப்பு | ரூ. ச. |
|---|---|---|
| A2 d | வரிமதிப்பாளர் கட்டணம் | 1,000 0 |
| G4 | நாய் பிடிப்போர் கட்டணம் | 500 0 |
| | | 1,500 0 |

| | மிகுதி | ரூ. ச. |
|---|---|---|
| A1d | ஏவலாட்கள் | 30 0 |
| A2a | தாபனச்செலவுகள் வேறுவகையில் காட்டப்பட்டது | 30 0 |
| D1a (i) | பொதுசன சுகாதாரம்— சுகாதார மேற்பார்வை யாளர் | 45 0 |
| D2b | நகர் சுத்திகரிப்பு வேலைகள்—சுரத்தை, மாடு லொறிகள் | 290 0 |
| D5C | நீர்வளங்கள் தாபரிப்பு | 65 0 |
| D7G | சந்தைகளும், சாலைகளும் தாபரிப்பு | 100 0 |
| F2 | இடுகாடுகள் தாபரிப்பு | 500 0 |
| J5 | நூல் நிலையம் தாபரிப்பு | 300 0 |
| A5(j) | பொது செலவு, தாபனச் செலவுகள் இடைநேர் செலவு | 140 0 |
| | | 1,500 0 |

மேலே கூறப்பட்டுள்ள கூட்டக்குறிப்புகள் உண்மையென அத்தாட்சிப் படுத்துகிறேன்.

பட்டன சபை அலுவலகம்,
மூதூர்,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 28ந் உ.

தலைவர்,
பட்டன சபை, மூதூர்.

1-882—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

---

# நானுவிதம்

## ஏறுவூர் பட்டின சபை

### கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272, 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணப்படும் பெயர்வழிக்காரரிடமிருந்து 1966 ம் ஆண்டிற்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இப்பட்டின சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினால், மறுப்பதற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றது.

பரீது மீராலெவ்வை,
தலைவர்,
பட்டின சபை, ஏறுவூர்.

பட்டின சபைக் காரியாலயம்,
ஏறுவூர்,
1966 ம் ஆண்டு ஜனவரி மீ 11 ந் உ.

அட்டவணை

| விண்ணப்பதாரரின் பெயரும், விலாசமும் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயரும், விலாசமும் |
|---|---|
| 1. அசனார்போடி முகம்மது இஸ்மாயில், 2 ம் 3 ம் குறிச்சி, ஏறுவூர் | இலக்க மாட்டிறைச்சிக்கடை, பழைய சந்தை, ஏறுவூர் |

1-879—27.1.66 ந் தேதிய வர்த்தமானி இல. 14,648

---

## கிண்ணியா கிராம சபை

### கசாப்புச் சட்டம்

1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கச் சட்டத்தின் 6 ம் பிரிவால் திருத்தப் பட்ட கசாப்புச் சட்டம் (அத்தியாயம் 201) இன் 7 ம் பிரிவின்படி கீழ்க் காணும் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள பெயர்வழிகாரர்கள் அவர் களின் பெயருக்கு எதிரே விபரிக்கப்பட்டுள்ள இடங்களில் 1966 ம் ஆண்டுக்கு கசாப்புக்கடைகள் நடாத்துவதற்கு என்னிடம் உத்தரவுப் பத்திரம் கோரி விண்ணப்பித்துள்ளனர் என்பதை இத்தால் விளம்பரப் படுத்துகிறேன்.

கிண்ணியா கிராம சபைப் பகுதியில் வாழும் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்கவிரும்பினால் அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத் திகதியிலிருந்து 7 நாட்களுக்கிடையில் தமது மறுப்புக்கான காரணங்களைக்காட்டி இரு பிரதிகளில் எழுத்துமூலம் எனக்குச் சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும் | கடை நடாத்தவிருக்கும் இடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|
| 1. ஆ. அலியார், முதலாம் வட்டாரம், கிண்ணியா | குட்டிக்கரச்சை சந்தி, பெரியகிண்ணியா | மாட்டிறைச்சி |
| 2. ஆ. அலியார், முதலாம் வட்டாரம், கிண்ணியா | கிண்ணியா கிராம சபைப் பகுதி | ஆட்டிறைச்சி |
| 3. வா. அப்துல்சலாம், மூன் றும் வட்டாரம், கிண் ணியா | கண்டலடியூத்து, சின்னக் கிண்ணியா | மாட்டிறைச்சி |
| 4. ஆர். எ. கமீது, ஒன்பதாம் வட்டாரம், கிண்ணியா | குறிஞ்சாக்கேணி, மூனை யச்சேனை | மாட்டிறைச்சி |

ற. லெ. அப்துல் சமது, ஜே.பி.
தலைவர், கிராம சபை.

கிண்ணியா, 15.1.66.

1-904—27.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,648

## அக்கரைப்பற்று கிராமசபை, மதுரங்குளி

### இறைச்சிக்கடை சட்ட அறிவித்தல்

றைச்சிக்கடைக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் பிரகாரம் கீழ்காணப்படும் அட்டவணையில் ரப்பட்டுள்ளவர்கள் குறிப்பிட்டுள்ள இடங்களில் இறைச்சிக்கடை நடாத்துவதற்கு 1966 ம் ஆண்டிற்கு உத்தரவு தரும்படி எனக்கு விண்ணப்பித் ள்ளார்கள்.

அக்கரைப்பற்று கிராம சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் யாராவது இவ் உத்தரவு வழங்கப்படுவதை ஆட்சேபிக்க விரும்பினால் அதற்கான ரணங்களை இணைப்பிரதிகளில் இவ்வர்த்தமானப் பத்திரிகைத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் காள்ளுகின்றேன்.

**அட்டவணை**

| | விண்ணப்பக்காரர் பெயரும், விலாசமும் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| 1. | எம். ஜே. ஏ. ஜபார், போல்ஸ் வீதி, புத்தளம் | மாட்டு இறைச்சிக்கடை, தளுவை |
| 2. | கமீது சம்சுதீன், கொத்தாந்தீவு | மாட்டு இறைச்சிக்கடை, கொத்தாந்தீவு |
| 3. | ரி. கபிறியல் பெரேரா, தேத்தாப்பளை மாம்புரி | மாட்டு இறைச்சிக்கடை, நாவற்காடு |
| 4. | எம். சி. செயினுலாப்தீன், பனையடிச் சோலை, மாம்புரி | மாட்டு இறைச்சிக்கடை, புழுதிவயல் |

வீ. கே. சதாசிவம்,
கி.ச. அக்கிராசனர்,
அக்கரைப்பற்று.

அக்கரைப்பற்று கி. ச. காரியாலயம்,
கடையாமோட்டை, மதுரங்குளி,
1966 ம் ஆண்டு தை மீ 16 ந் வ.

-858—27.1.66 ந் தேதிய வர்த்தமானி இல. 14,648

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

---

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.